# புதிய காலகட்டத்தில் ஒன்றிணைந்து முன்னேறுவோம்



BUDGET
2023

# முன்னுரை

அன்பார்ந்த சிங்கப்பூரர்களே,

நாம் கடந்த மூன்றாண்டு காலமாக கொவிட்-19 கிருமிப் பரவலுடன் போராடி நெடுவழி கடந்து வந்திருக்கிறோம்.

அது பல ஏற்ற இறக்கங்கள் நிறைந்த சவால்மிக்கப் பயணமாக அமைந்தது. நமது கூட்டு முயற்சிகளின் மூலமாகவும், ஒருவர்மீது மற்றவர் வைத்திருந்த நம்பிக்கையினாலும், நாம் ஒரு புதிய மைல்கல்லை அடைந்திருக்கிறோம்.

இனி நாம் கிருமிப் பரவலுக்குப் பிந்திய புதிய காலகட்டத்தில் நமக்கான முன்னேற்றப் பாதையை வகுக்க வேண்டும். இந்த முயற்சியில், நாங்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் சிங்கப்பூரர்களே மையமாக இருக்கிறார்கள்.

வரவுசெலவுத் திட்டம் 2023, ஒளிமயமான எதிர்காலத்தை அடைவதற்கான முக்கிய திட்டங்களை உள்ளடக்குகிறது.

நமது பொருளியலின் போட்டித்திறனையும் புத்தாக்கத்தையும் கட்டிக்காத்து, நமது ஊழியர்களின் திறனை வளர்த்து, ஒவ்வொருவரும் அவரவரது ஆற்றலை அடைய முழுமையான வாய்ப்புகளை வழங்கி, நீங்கள் செழிப்படைய நாங்கள் உதவி செய்வோம்.


நமது சமூக இணக்கத்தை வலுப்படுத்தி, குடும்பங்களுக்கு மட்டுமல்லாது, நம் மூத்தோர்கள், எளிதில் பாதிப்படையக்கூடியவர்கள் ஆகியோருக்கும், கூடுதல் உத்தரவாதம் அளிப்போம்.

நாம் தொடர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கவும், வெளித்தரப்பு குறுக்கீடுகளிலிருந்தும் அதிர்ச்சிகளிலிருந்தும் மீண்டும் வலுவுடன் மீண்டெழவும், நமது கூட்டு மீள்திறனை வளர்ப்போம்.

நிச்சயமற்ற உலகச் சூழலில் ஒரு சிறிய நாடாக இருக்கும் நம்முடைய எதிர்காலப் பாதை எளிதாக இருக்கப் போவதில்லை. ஆனால், இந்தப் பயணத்தை நாம் ஒன்றிணைந்து மேற்கொள்கிறோம். கடந்தகாலச் சவால்களிலிருந்து மீண்டுவந்த அனுபவத்திலிருந்து நாம் தைரியமும் வலிமையும் பெற முடியும்.

நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால், நமக்கும் நமது வருங்காலத் தலைமுறைகளுக்கும் மேம்பட்ட எதிர்காலத்தை உருவாக்கித் தர முடியும்.

**லாரன்ஸ் வோங்**
துணைப் பிரதமர், நிதி அமைச்சர்



# புதிய காலகட்டத்தில் ஒன்றிணைந்து முன்னேறுவோம்


## சிங்கப்பூரர்களுக்காக ஆதரவுத் திட்டங்கள் 7 - 9

## நமது பொருளியலையும் ஊழியர்களின் திறனையும் வளர்ப்போம்

தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவளிப்போம் 11 - 12

ஊழியர்களுக்கு ஆதரவளிப்போம் 13

## நமது சமூக இணக்கத்தை வலுவாக்குவோம்

குடும்பங்களை அரவணைக்கும் சிங்கப்பூரை உருவாக்குவோம் 15 - 16

குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு ஆதரவளிப்போம் 16

முதுமைக் காலத்திற்கு உத்தரவாதம் அளிப்போம் 17

## மீள்திறன்மிக்க தேசத்தை உருவாக்குவோம்

அமைப்புகளின் ஆற்றலை வளர்ப்போம் 19


பொருளியல், உள்கட்டமைப்பு மீள்திறனை உறுதிசெய்வோம் 19

நமது பருவநிலை மீள்திறனைக் காப்போம் 20

ஒரே மக்களாக மீள்திறனை வெளிப்படுத்துவோம் 20

## போட்டித்தன்மையும் மீள்திறனும் மிக்க நியாயமான வரிவிதிப்பு முறை 22 - 23

# சிங்கப்பூரர்களுக்காக ஆதரவுத் திட்டங்கள்






## 2023-ல் உங்களுக்கான உத்தரவாதம்

உயர் பணவீக்கத்தாலும், பொருள், சேவை வரி உயர்வாலும் அதிகரித்துள்ள அன்றாடச் செலவினங்களை சிங்கப்பூரர்கள் சமாளிப்பதற்கு அரசாங்கம் உதவுகிறது.


**சிங்கப்பூரர்கள் 2023-ல் பின்வரும் திட்டங்களின்மூலம் நன்மை அடையலாம்:**

### தனிநபர்களுக்கு



- ரொக்கம்
  - 21 முதல் 54 வயது — **அதிகபட்சம் $1,700**
  - 55 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது — **அதிகபட்சம் $2,300**
- மெடிசேவ் நிரப்புத்தொகை
  - 20 மற்றும் அதற்குக் குறைவான வயது — **$150**
  - 55 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது — **$150 - $600**
- பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு நிரப்புத்தொகை — **$400**
- எடுசேவ் கணக்கிலும், உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கிலும் நிரப்புத்தொகை — **$300**

### குடும்பங்களுக்கு



- சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள் — **$300**
- யு-சேவ் கழிவுகள் — **$440 - $760**
- சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள் — **1.5 - 3.5 மாதங்கள்**

# 2023-ல் உங்களுக்கான உத்தரவாதம்

உயர் பணவீக்கத்தாலும், பொருள், சேவை வரி உயர்வாலும் அதிகரித்துள்ள அன்றாடச் செலவினங்களை சிங்கப்பூரர்கள் சமாளிப்பதற்கு அரசாங்கம் உதவுகிறது.



**ஆண்டு முழுவதும் ஆதரவு கிடைக்கும்:**



### ஜனவரி

- **சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம் (AP)* & அக்டோபர் 2022இன் வாழ்க்கைச் செலவினத் தொகுப்புத்திட்டம்] — $300
- **யு-சேவ் கழிவுகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு# மற்றும் உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $110 - $190
- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — அதிகபட்சம் 0.5 மாதம்

### பிப்ரவரி

- **மூத்த குடிமக்களுக்கான ரொக்க போனஸ்** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $200 - $300
- **மெடிசேவ் நிரப்புத்தொகை** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $150



### ஏப்ரல்

- **யு-சேவ் கழிவுகள்** [GSTV மற்றும் உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $110 - $190
- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — 0.5 - 1 மாதம்



### மே

- **எடுசேவ் கணக்கிலும், உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கிலும் நிரப்புத்தொகை** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $300

### ஜூன்

- **ரொக்கம்** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — அதிகபட்சம் $400
- **மூத்த குடிமக்களுக்கான ரொக்க போனஸ்** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $200 - $300



### ஜூலை

- **யு-சேவ் கழிவுகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு மற்றும் உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $110 - $190
- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — 0.5 - 1 மாதம்

### ஆகஸ்ட்

- **ரொக்கம்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — $350/$700
- **மெடிசேவ் நிரப்புத்தொகை** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — $150 - $450

### செப்டம்பர்

- **பிள்ளை மேம்பாட்டுக் கணக்கு நிரப்புத்தொகை** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $400

### அக்டோபர்

- **யு-சேவ் கழிவுகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு மற்றும் உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $110 - $190
- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடிகள்** [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு] — 0.5 - 1 மாதம்



### டிசம்பர்

- **ரொக்கம்** [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்] — $200 - $600



*AP தொகுப்புத்திட்டம், சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் பொருள், சேவை வரி உயர்வின் பாதிப்பைக் குறைக்கிறது. இதற்காக ஒதுக்கப்படும் தொகை $6.6 பில்லியனில் இருந்து 2023-ல் $9.6 பில்லியனுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. உயர் பணவீக்கத்தை ஈடுசெய்யவும், சிங்கப்பூரர்களின் வாழ்க்கைச் செலவினக் கவலைகளுக்குக் கூடுதலாக ஒருமுறை ஆதரவு வழங்கவும் இந்த ஒதுக்கீடு பயன்படும்.

#GSTV: நிரந்தர பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டுத் திட்டம், குறைந்த-நடுத்தர வருமானம் பெறும் சிங்கப்பூர்க் குடும்பங்களின் பொருள், சேவை வரிச் செலவுகளைக் குறைப்பதற்கு, உத்தரவாதத் தொகுப்புத்திட்டம் வழங்கும் இடைக்கால ஆதரவுக்கு அப்பாலும், தொடர்ந்து உதவி வழங்குகிறது.

நீங்கள் எந்தெந்த உதவிகளுக்குத் தகுதிபெறலாம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

# நமது பொருளியலையும் ஊழியர்களின் திறனையும் வளர்ப்போம்






## தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவளிப்போம்


### உள்ளூர் தொழில்நிறுவனங்கள் மேம்படுத்தப்படும்

- நம்பிக்கையளிக்கும் உள்ளூர் நிறுவனங்களுக்குப் பிரத்தியேக ஆதரவு வழங்க, சிங்கப்பூர் அனைத்துலகத் தொழில்நிறுவனத் திட்டத்தின்கீழ் $1 பில்லியன் ஒதுக்கப்படும்
- **சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன இணை முதலீட்டு நிதியின்** வாயிலாக, நம்பிக்கையளிக்கும் சிறிய, நடுத்தர நிறுவனங்களில் முதலீடு செய்ய கூடுதலாக $150 மில்லியன்



### ஆற்றல்கள் வளர்க்கப்பட்டு, தரமான முதலீடுகள் நிலையாக ஊன்றப்படும்

- **தேசிய உற்பத்தித்திறன் நிதியில்** $4 பில்லியன் சேர்க்கப்படும். முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு ஆதரவாக வரையறை விரிவுபடுத்தப்படும்




### நீடித்து நிலைக்கத்தக்க முறையில் புத்தாக்கம் தூண்டப்படும்

- தொழில்நிறுவனங்களின் புத்தாக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க **தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம்** அறிமுகமாகும். இத்திட்டம் மேம்பட்ட வரிக் கழிவுகள்/செலவுத்தொகைகள் வழங்குவதோடு, ரொக்க மாற்றுத் தெரிவையும் வழங்கும்

## விலைவாசி நெருக்குதல்களைச் சமாளிப்போம்

- கடன் பெறுவதற்குத் துணை புரிய, **தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்ட** மேம்பாடுகள் 31 மார்ச் 2024 வரை நீட்டிக்கப்படும்:
  - வர்த்தகக் கடன்களுக்கு 70% இடரை அரசாங்கம் பகிரும்
  - வர்த்தக, தொழில் மூலதனக் கடன்களுக்கான அதிகபட்சத் தொகை கூட்டப்படும்
  - திட்டப்பணி கடன்களின் வாயிலாக, உள்நாட்டுக் கட்டுமானத் திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்கப்படும்



- மின்சார விலை அதிகமாக இருப்பதால், உணவுச் சேவைகள், உணவு உற்பத்தி, சில்லறை விற்பனைத் துறைகளில் உள்ள சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தும் சாதனங்களைப் பயன்படுத்தத் தொடங்குவதற்கு உதவியாக எரிசக்தி செயலாற்றல் **மானியம்** 31 மார்ச் 2024 வரை நீட்டிக்கப்படும்






# ஊழியர்களுக்கு ஆதரவளிப்போம்


## பயிற்சியும் பணியமர்வும் ஒருங்கிணைக்கப்படும்

- நுட்பத்திறன் பொறியியல், சில்லறை விற்பனை, மொத்த விற்பனை வர்த்தகத் துறைகளில் **வேலை-திறன் ஒருங்கிணைப்பு** அமைப்புகள் முன்னோட்டமாகச் செயல்படுத்தப்படும். தொழில்துறைக்குத் தேவைப்படும் பயிற்சித் திட்டங்களைத் தயாரிக்கவும், பணியமர்வுக்குத் துணை புரியவும் தொழில்துறையின் முக்கிய அங்கத்தினர்களை ஒன்றுசேர்ப்பது இதன் நோக்கம்



## வேலை நியமன ஆதரவு மேம்படுத்தப்படும்

- குறைந்த வருமான ஊழியர்களுக்கான **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டத்திற்கு** $2.4 பில்லியன் ஒதுக்கப்படும். 2023-ல் தகுதிபெறும் சம்பள உயர்வுகளுக்கு அரசாங்கம் வழங்கும் இணைநிதி உயர்த்தப்படும்:
  - $2,500 வரையிலான சம்பளங்கள்: 50%-லிருந்து 75%-ஆக உயர்வு
  - $2,500-க்கு மேலிருந்து $3,000 வரையிலான சம்பளங்கள்: 30%-லிருந்து 45%-ஆக உயர்வு



- மூத்த ஊழியருக்கான வேலை நியமன உதவித்தொகையும், பகுதிநேர மறுவேலை நியமனத்திற்கான மானியமும் 2025 வரை நீட்டிக்கப்படும். மூத்த ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குத் தொடர்ந்து கழிவுகள் வழங்குவதற்கும், முதலாளிகள் நீக்குப்போக்கான வேலை ஏற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் திட்டங்களும் வழங்க ஊக்குவிப்பதற்கும் இது துணைபுரியும்.



- உடற்குறை உள்ளவர்களின் வேலை நியமனத்தை ஊக்குவிக்க, உடற்குறையுள்ளோருக்கான **வேலை நியமன உதவித்தொகை** மேம்படுத்தப்படும்
- முன்னாள் குற்றவாளிகளின் வேலை நியமனத்தை ஊக்குவிக்க, **வேலை நியமனத்திற்கான ஊக்குவிப்பு உதவித்தொகை** அறிமுகப்படுத்தப்படும்

# நமது சமூக இணக்கத்தை வலுவாக்குவோம்




## குடும்பங்களை அரவணைக்கும் சிங்கப்பூரை உருவாக்குவோம்

- 1 அக்டோபர் 2022 தேதிக்கும் 13 பிப்ரவரி 2023 தேதிக்கும் இடையில் பிறந்த தகுதிபெறும் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கு $3,000 குழந்தை ஆதரவு மானியம் நீட்டிக்கப்படும்
- தகுதிபெறும் மற்ற சிங்கப்பூர்ப் பிள்ளைகள் அனைவருக்கும்:


| பிறந்த தேதி | 14 பிப்ரவரி 2023 - 31 டிசம்பர் 2023 | 1 ஜனவரி 2024 தேதியிலிருந்து |
|---|---|---|
| ரொக்க ஆதரவு | • **குழந்தை போனஸ் ரொக்க அன்பளிப்பு** $3,000 அதிகரிக்கும்<br>• **பிள்ளை மேம்பாட்டுக் கணக்குக்கு அரசாங்கம்** வழங்கும் பங்களிப்பு அதிகரிக்கும்<br>- தொடக்க மானியம் $2,000 அதிகரிக்கும்<br>- முதலாவது, இரண்டாவது பிள்ளைகளுக்கு அரசாங்கம் வழங்கும் இணைத்தொகை வரம்பு $1,000 அதிகரிக்கும்  | |
| அரசாங்கம் பணம் தரும் பகிர்ந்து கொள்கிற பெற்றோர் விடுப்பு | 2 வாரங்கள் | 4 வாரங்கள் (⬆விருப்பத்தின்பேரில் 2 வாரங்கள் அதிகரிப்பு) |
| **வேலைசெய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்** (WMCR)^ | | |
| 1வது பிள்ளை | தாய் சம்பாதித்த வருமானத்தில் 15% | $8,000 |
| 2வது பிள்ளை | தாய் சம்பாதித்த வருமானத்தில் 20% | $10,000 |
| 3வது பிள்ளை மற்றும் அதற்குமேல் | தாய் சம்பாதித்த வருமானத்தில் 25% | $12,000 |

^1 ஜனவரி 2024 தேதிக்கு முன்பாகப் பிறந்த அல்லது தத்தெடுக்கப்பட்ட தகுதிபெறும் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கான WMCR கோரிக்கைகளில் மாற்றம் இல்லை

- 1 ஜனவரி 2024 தேதியிலிருந்து 2 வயதுக்குக் குறைவான சிங்கப்பூர்ப் பிள்ளைகள் அனைவருக்கும்: ஒவ்வொரு பெற்றோரும் ஓர் ஆண்டில் எடுக்கக்கூடிய **சம்பளமில்லாத குழந்தைப் பராமரிப்பு விடுப்பு** 6 நாட்களிலிருந்து 12 நாட்களாக அதிகரிக்கப்படும்




- முதல்முறையாக வீடு வாங்கும் குறிப்பிட்ட சிலவகை குடும்பங்கள், தேவைக்கேற்பக் கட்டித்தரப்படும் (BTO) வீடு வாங்குவதற்குக் கூடுதல் ஆதரவு வழங்கப்படும்



- **மத்திய சேம நிதி வீட்டு மானியம்** $30,000 அதிகரிக்கும்
  - முதல்முறையாக வீடு வாங்கும் தகுதிபெறும் குடும்பங்கள், மறுவிற்பனை வீவக வீடு வாங்குவதற்கு மொத்தம் $190,000 வரை மானியம் கிடைக்கும்
- தங்களைச் சார்ந்திருப்பவர்களைப் பராமரிக்க உதவி தேவைப்படும் அனைத்து குடும்பங்களும் குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கான சலுகைத் தீர்வையுடன் பயனடைவதால், **குடிபெயர்ந்த இல்லப் பணிப்பெண்களுக்கான தீர்வைக்கு வழங்கப்படும் வரி நிவாரணம்** 2025-ல் நீக்கப்படும்

## குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு ஆதரவளிப்போம்

- பிள்ளைகளின் ஆக்ககரமான வளர்ச்சிக்கு ஆதரவளிக்க **கிட்ஸ்டார்ட்** திட்டம் விரிவுபடுத்தப்படும்
- சமூகச் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கு **சமூகத் தொடர்புக் கட்டமைப்பு** பயன்படுத்தப்படும்
- குறைந்த வருமானக் குடும்பங்களுக்குத் தேவையான சமூக உதவியை வழங்க, **சமூகநல அறக்கட்டளை நிதிக்கு** $300 மில்லியன் ஒதுக்கப்படும்






## முதுமைக் காலத்திற்கு உத்தரவாதம் அளிப்போம்

### நீண்டகாலப் பராமரிப்புக்கும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கும் ஆதரவளிக்கப்படும்

- வீட்டில், நிலையத்தில் அல்லது அமைப்பில் பராமரிப்பு தேவைப்படும் மூத்தோருக்கு பணவசதிச் சோதனையின் அடிப்படையில் வழங்கப்படும் நிதி உதவிக்கு ஆதரவளிக்க, **முதியோர்ப் பராமரிப்பு நிதிக்கு** $500 மில்லியன் ஒதுக்கப்படும்
- குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கும் மருத்துவக் கட்டணங்களால் பணச் சிரமத்தில் இருக்கும் மூத்தோருக்கும் உதவும் **மெடிஃபண்டு மருத்துவ நிதிக்கு** $1.5 பில்லியன் ஒதுக்கப்படும்



### ஓய்வுக்காலத் தேவைக்கான ஆதரவு வலுவாக்கப்படும்

- இணையவழி ஊழியர்கள் மத்திய சேம நிதி சந்தா உயர்வைச் சமாளிக்க உதவியாக, முதல் நான்கு ஆண்டுகளுக்கு **மத்திய சேம நிதி சந்தா** தொகை அதிகரிப்பிற்கான ஆதரவு வழங்கப்படும்
- மூத்த ஊழியர்களின் **மத்திய சேம நிதி சந்தா விகிதங்கள்** 2024-ல் உயர்த்தப்படும். முதலாளிகளுக்கு மத்திய சேம நிதி சந்தா **தொகை** அதிகரிப்பிற்கான கழிவு வழங்கப்படும்
- **பணி ஓய்வுக்கால வழங்குதொகைத் திட்டத்தில்** இடம்பெற்றிருக்கும் மூத்தோருக்கான **குறைந்தபட்ச மாதாந்தர மசேநி வழங்குதொகை** $350 ஆக உயர்த்தப்படும்
- **மத்திய சேம நிதியின் மாதச் சம்பள வரம்பு** 2026-ஆம் ஆண்டுக்குள் $6,000-லிருந்து $8,000 ஆக உயர்த்தப்படும்



# மீள்திறன்மிக்க தேசத்தை உருவாக்குவோம்




## அமைப்புகளின் ஆற்றலை வளர்ப்போம்



- **அரசாங்கச் சேவை அமைப்புகளின் ஆற்றலை வளர்ப்பதற்காக**, அரசாங்க ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், அவர்களது திறன்களின் அடிப்படையில் பல்வேறு நெருக்கடிகாலப் பணிகளில் அமர்த்தவும் மேலும் விரிவான செயல்முறை அமலாக்கப்படும்
- **நெருக்கடிகாலங்களில் தனியார் மற்றும் மக்கள் துறைகளின்** ஆற்றல் பயன்படுத்திக் கொள்ளப்படும்

## பொருளியல், உள்கட்டமைப்பு மீள்திறனை உறுதிசெய்வோம்

- **அதிகமான இடங்களிலிருந்து இறக்குமதி செய்தும், உணவு, அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பைத் தேக்கி வைத்தும், உள்ளூர் உற்பத்தியின் துணையோடும்** நமது பொருளியல் மற்றும் விநியோகத் தொடர்களின் மீள்திறன் வளர்க்கப்படும்
- **கையிருப்புகளைத் தேக்கி வைக்கும் உத்திகளை** மறுபரிசீலனை செய்து, **அத்தியாவசியப் பொருட்களின் பன்மய விநியோகம்** மேம்படுத்தப்படும்
- சாத்தியப்படும் சூழ்நிலைகளில், **கட்டடங்கள் அமைதிக் காலத்திலும் நெருக்கடி நிலையிலும் பயன்படும் வகையில்** வடிமைக்கப்படும்



## நமது பருவநிலை மீள்திறனைக் காப்போம்

- கரியமில வாயுவற்ற நிகர நிலையை 2050-ஆம் ஆண்டுக்குள் அடைய, நமது பொருளியலிலும் சமுதாயத்திலும் **கரியமில வாயுவைக் குறைக்கும் முயற்சி** துரிதப்படுத்தப்படும்
- உலகின் சூடேற்றத்தையும் உயரும் கடல்நீர்மட்டத்தையும் சமாளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## ஒரே மக்களாக மீள்திறனை வெளிக்காட்டுவோம்

- நன்கொடைகளை ஊக்குவிப்பதற்காக, **பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கும்** (IPCs) **தகுதிபெறும் அமைப்புகளுக்கும் வழங்கப்படும் நன்கொடைகளுக்கான** 250% **வரிக் கழிவு** 2026 கடைசி வரை நீட்டிக்கப்படும்



- தொழில்நிறுவனங்களுக்கும் பொதுநல அறக்கொடை அமைப்புகளுக்கும் இடையிலான பங்காளித்துவத்தை வளர்க்க, **நிறுவனத் தொண்டூழியத் திட்டம்** மேம்படுத்தப்படும்
  - 2026 கடைசி வரை நீட்டிக்கப்பட்டு, தகுதிபெறும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும்
  - ஒவ்வொரு பொதுநல அறக்கொடை அமைப்புக்கும் வரிக் கழிவு கோரக்கூடிய தொகை இருமடங்காகி, ஓர் ஆண்டுக்கு அதிகபட்சம் $100,000 ஆக இருக்கும்
- சமூகச் சேவை துறைக்குத் திறனாளர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும், சம்பள வரையறைகள் மறுஆய்வு செய்யப்பட்டு, சம்பள வழிகாட்டிகள் உயர்த்தப்படும்



- மூத்தோருக்கு சமூகப் பராமரிப்புச் சேவைகள் வழங்கும் சமூகச் சேவை அமைப்புகளுக்கு வெள்ளிக்கு வெள்ளி நன்கொடை வழங்கி ஆதரவளிப்பதற்காக, மூத்தோர் **சமூக அறநிதித் திட்டத்திற்கு** $1 பில்லியன் வழங்கப்படும்
- சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவளிக்க, அடுத்த மூன்று ஆண்டுகளில் $10 மில்லியன் வழங்கப்படும்



# போட்டித்தன்மையும் மீள்திறனும் மிக்க நியாயமான வரிக் கட்டமைப்பு




## நிறுவன வருமான வரி

- **இலாப வரிக் குறைப்பு, இலாபத் தொகைப் பெயர்ப்பு உத்திமுறைத் திட்டம்** (BEPS 2.0)
  - பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு (MNE) 1 ஜனவரி 2025 அன்று அல்லது அதற்குப் பிறகு **இலாப வரிக் குறைப்பு, இலாபத் தொகைப் பெயர்ப்பு உத்திமுறை 2-ன்கீழ் உலகளாவிய எதிர்ப்பு இலாப வரிக் குறைப்புக்கு** (GloBE) **எதிரான விதிமுறைகளும் உள்நாட்டு நிரப்பு வரியும்** (DTT) அமலாக்கப்படும்
  - அனைத்துலக நடப்புகளைக் கண்காணித்து, தாமதங்கள் ஏற்பட்டால் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்யப்படும்
  - முதலீடுகளை ஈர்ப்பதிலும் தக்க வைப்பதிலும் சிங்கப்பூர் தொடர்ந்து போட்டித்தன்மையுடன் திகழ்வதை உறுதிசெய்ய, தொழில்துறை மேம்பாட்டுத் திட்டங்கள் புதுப்பிக்கப்படும்




## வாகன வரி

- விலையுயர்ந்த, சொகுசுக் கார்களுக்கு **உயர் கூடுதல் பதிவுக் கட்டண விகிதங்கள்**
  - பொதுச் சந்தை மதிப்பில் $40,000-க்கு மேலிருந்து $60,000 வரையிலான தொகைக்கு 190% வரி விதிக்கப்படும்; $60,000-க்கு மேலிருந்து $80,000 வரையிலான தொகைக்கு 250%; $80,000-க்கு மேற்பட்ட தொகைக்கு 320%
- **சிறப்பு கூடுதல் பதிவுக் கட்டணத் தள்ளுபடிக்கு** $60,000 வரம்பு விதிக்கப்படும்



## முத்திரை வரி மற்றும் கூடுதலான சொத்துரிமை மாற்ற வரி

- கூடுதல் மதிப்புள்ள சொத்துகளுக்கான **முத்திரை வரி விகிதங்கள்** 15 பிப்ரவரி 2023 தேதியிலிருந்து உயர்கிறது:
  - **குடியிருப்புச் சொத்துகளுக்கு**, சொத்து மதிப்பில்:
    - $1.5 மில்லியனுக்கு மேலிருந்து $3 மில்லியன் வரையிலான தொகைக்கு: 5% வரி விதிக்கப்படும் (முன்பு 4%)
    - $3 மில்லியனுக்கு மேற்பட்ட தொகைக்கு: 6% வரி விதிக்கப்படும் (முன்பு 4%)
  - **குடியிருப்பு அல்லாத சொத்துகளுக்கு**, சொத்து மதிப்பில்:
    - $1 மில்லியனுக்கு மேலிருந்து $1.5 மில்லியன் வரையிலான தொகைக்கு 4% வரி விதிக்கப்படும் (முன்பு 3%)
    - $1.5 மில்லியனுக்கு மேற்பட்ட தொகைக்கு: 5% வரி விதிக்கப்படும் (முன்பு 3%)
- தகுதிபெறும் இடைக்காலப் பரிவர்த்தனைகளுக்கு 14 பிப்ரவரி 2023 அன்று அல்லது அதற்கு முன்பாக நிலவிய முத்திரை வரி விகிதங்கள் விதிக்கப்படும்
- சொத்துடைமை நிறுவனங்களில் தகுதிபெறும் பங்குமுதல் பற்றுமானங்களை வாங்குவோருக்கு விதிக்கப்படும் **கூடுதலான சொத்துரிமை மாற்ற வரியும்** இதற்கேற்பத் திருத்தப்படும்

## புகையிலை வரி

- **புகையிலைப் பொருட்களின் வரி** 15% உயர்த்தப்படும்

MOF
MINISTRY OF FINANCE
SINGAPORE

**www.singaporebudget.gov.sg**
இணையப்பக்கத்தில் மேல்விவரங்களைப் படித்தறியலாம்

14 பிப்ரவரி 2023 நிலவிய தகவலின் அடிப்படையில்